கடந்த 28.04.2026–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு **அதன்** அடிப்படையில் மேற்படி சாட்சி இன்று குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.06.2026.**

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் எதற்காக Ex.D1 ஆன எனது கல்வி நிறுவனத்தின் Account Statement–யை தாக்கல் செய்தேன் என்றால், 10.08.2021–ம் தேதியன்று நான் புகார்தாரரிடம் பணம் வாங்கியதாகவும் 09.02.2022–ம் தேதியன்று நான் காசோலை கொடுத்ததாகவும் கூறி தாக்கல் செய்த பொய்யான வழக்கை நிரூபணம் செய்வதற்காக எனது Account Statement–யை நான் தாக்கல் செய்தேன்.

2. எனக்கு கொடுத்த காசோலை புத்தகத்தில் மொத்தம் எத்தனை காசோலைகள் இருந்தது என்றால், 100 காசோலைகள் இருந்தது. எனது கல்வி நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் வரவு செலவு கணக்குகளை Auditing தாக்கல் செய்வது வழக்கம் என்றால், சரிதான்.

3. மேற்படி எனது 100 காசோலைகள் கொண்ட புத்தகத்தில் தற்சமயம் எத்தனை காசோலைகள் பயன்படுத்தாமல் என் வசம் உள்ளது என்றால், அது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. நான் யார் யாருக்கு காசோலை கொடுத்தாலும் அந்த விவரத்தை குறிப்பிட்டு வைப்பது வழக்கம் என்றால், பொதுவாக எனது கல்வி நிறுவனத்தின் காசோலைகளை மாணவர்களிடம் DD எடுக்ப்பதற்காக கொடுப்பது வழக்கம் என்பதால் அதனை குறிப்பிட்டு வைப்பது வழக்கமில்லை.

4. நான் தாக்கல் செய்த Account Statement Ex.D1–ல் மாணவர்களுக்கு அல்லாமல் மற்ற நபர்களுக்கும் காசோலை கொடுத்து அவர்கள் அதனை பயன்படுத்தியதாக Ex.D1 account statement–ல் துலங்கியது என்றால், சரிதான்.

5. எனது கல்வி நிறுவனத்தின் தினசரி வரவு செலவு கணக்குகளை நான் பார்ப்பேனா அல்லது எனது ஊழியர்கள் பார்ப்பார்கள் என்றால், எனது ஊழியர்கள் பார்ப்பார்கள். எனது ஊழியர்கள் காசோலை எண் 000037 என்ற காசோலை கணக்கில் வரவில்லை என என்னிடம் கூறியுள்ளனரா என்றால், இல்லை.

6. தற்சமயம் எத்தனை காசோலை புத்தகம் என்னிடம் உள்ளது என்றால், ஒரு காசோலை புத்தகம் உள்ளது. அதன் எண் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது.

நான் தாக்கல் செய்த Ex.D1 ஆவணத்தின் படி எனது காசோலைகள் வரிசையில் 25 காசோலைகளுக்கு மேல் கலெக்சனுக்கு தாக்கல் செய்யாமல் உள்ளது என்றால், சரிதான். அது ஏன் என்றால், சில மாணவர்கள் முதலில் தேர்வு எழுதுவதற்காக காசோலை பெற்று செல்வார்கள். அதன்பிறகு தேர்வு எழுத விருப்பப்படவில்லை என்றால், அந்த காசோலைகள் Cancel செய்யப்படும்.

7. எனது கல்வி நிறுவனத்தில் Cancel செய்யப்பட்ட காசோலைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால், தாக்கல் செய்யலாம். Ex.D1 ஆவணத்தின் 2021–ம் ஆண்டில் அக்டோபர் மாதம் எனது காசோலை வங்கியில் தாக்கல் செய்து திருப்பப்பட்டுள்ளது என்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை.

8. எனது கல்வி நிறுவனத்தின் காசோலைகள் வங்கியில் தாக்கல் செய்து திருப்பப்பட்டால் அந்த விவரம் எனது வங்கியிலிருந்து தெரிவிப்பார்களா என்றால், சில காசோலைகளை குறித்து தெரிவிப்பார்கள், சில காசோலைகளை குறித்து தெரிவிக்க மாட்டார்கள். அதனை என்னிடமோ அல்லது எனது Manager–ரிடமோ சொல்வார்கள்.

9. நான் இவ்வழக்கில் அனுப்பியுள்ள பதிலறிவிப்பிற்குள்ள சங்கதிகளை யார் எனது வழக்கறிஞரிடம் கூறியது என்றால், நான் தான் கூறினேன். ஜோசப்ராஜ் யாருடன் எனது கல்வி நிறுவனங்களுக்கு வருவார் என்றால், தனியாக தான வருவார்.

10. புகார்தாரர் எனது காசோலையை திருடிச் சென்றது குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனது காசோலையை புகார்தாரர் திருடிச் சென்றது தெரியவந்தது. அதன்பிறகு நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை.

11. உண்மையில் புகார்தாரர் எனது காசோலையை திருடவில்லை என்றாலும், நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் புகார்தாரரிடமிருந்து 7 லட்சம் ரூபாய் கடன் பெற்றுக் கொண்டு திட்டமிட்டு மோசடி செய்யும் எண்ணத்தோடு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. மாணவர்களின் பெயருக்கு எவ்வாறு காசோலை கொடுத்து தேர்வுக்காக DD எடுப்பேன் என்றால், மாணவர்கள் முதலில் கல்விக் கட்டணத்தை எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துவார்கள். அதன்பிறகு எந்தெந்த மாணவர்களுக்கு எவ்வளவு

தொகை என்பதை குறித்து நான் எனது கல்வி நிறுவனத்திலிருந்து காசோலை மூலம் சம்மந்தப்பட்ட மாணவர்களுக்கு DD எடுத்துக் கொடுப்பேன்.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.